திருமதி ஜோதி வெங்கடாசலம்: தலைவரவர்களே, தென் ஆற்காடு ஜில்லாவிலிருந்து முந்திரி பயிர் செய்வதற்கு கடன் கோரி அரசுக்கு மனு செய்து இருப்பதாகத் தெரிய வருகிறது. அதிலே எத்தனை பேருக்கு கடன் கொடுக்கப்பட்டது என்பதை அமைச்சர் அவர்கள் தெரிவிப்பாரா ?

மாண்புமிகு திரு. அ. பெ. தர்மலிங்கம் : தென் ஆற்காடு மாவட்டத்தில் தீவிர சாகுபடித் திட்டம் செயல் படுத்தப்பட்டு வருகிறது. எத்தனை பேர்களுக்கு என்பதற்கு தனியாகக் கேள்வி போட்டால் விவரம் தெரிவிக்கிறேன்.

திரு. சோ. கருணைநாதன் : தலைவரவர்களே, முந்திரி உற்பத்தியைப் பெருக்க அரசு என்னென்ன நடவடிக்கைகளை எடுத்து வருகிறது என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : இந்த கேள்விக்கு பதில் சொல்ல வேண்டியதில்லை.

மாண்புமிகு திரு. அ. பெ. தர்மலிங்கம் : இது வரையில் சொன்னதெல்லாம் முந்திரி உற்பத்தியைப் பெருக்க என்னென்ன செய்யப்படுகிறது என்பதுதான் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

விவசாயத்தில் தொழில் நுட்பப்பள்ளிகள்

* 482 வினா—திரு. தோப்பூர் திருவேங்கடம் : மாண்புமிகு வேளாண்மைத்துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) வேளாண்மையை பெருக்குவதற்கு தொழில் நுட்பப் பள்ளிகளைத் தொடங்கும் செயற்குறிப்பு ஏதேனும் அரசின் பரிசீலனையில் உள்ளதா ?

(இ) ஆமெனில், அது பற்றிய விவரங்கள் யாவை ?

மாண்புமிகு திரு. அ. பெ. தர்மலிங்கம் : (அ) விவசாயத்தில் தொழில் நுட்பப் பள்ளிகளை ஆரம்பிக்கும் செயற்குறிப்புகள் ஒன்றும் அரசின் பரிசீலனையில் இல்லை.

(இ) இக்கேள்விக்கு இடமில்லை.

விற்கப்படாமல் தேங்கியுள்ள உரம்

* 483 வினா—திரு. கே. ஏ. வகாப் : மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

1971 ஜனவரி முதல் ஜூலை முடிய தமிழ்நாடு அரசிடம் விற்காமல் தேங்கி இருந்த உர வகைகளின் மதிப்பு எவ்வளவு ரூபாய் ?

1971 டிசம்பர் 16]

மாண்புமிகு திரு. அ. பெ. தர்மலிங்கம் : 1971 ஜூலை முடிவில் தமிழக அரசிடம் விற்காமல் தேங்கி இருந்த உரங்களின் மதிப்பு ரூபாய் 7,87,09,836.

திரு. கே. ஏ. வகாப் : தலைவரவர்களே, இவ்வளவு அதிகமான உரம் தேங்கி இருந்ததே, அவைகள் எல்லாம் தற்போது விற்பனை ஆகி விட்டதா ? அப்படி தேங்கியிருந்த டை-அம்மோனியம் பாஸ்பேட் என்ற உரம் மிகவும் சீர்கேடான நிலையில் விவசாயிகளுக்கு அளிக்கப்பட்டதால் அவர்கள் மிகவும் கஷ்டத்திற்குள்ளானார்கள் என்பது அரசுக்குத் தெரியுமா ? அதிலே எடை குறைவு ஏற்பட்டு இருந்தது என்பது அரசுக்குத் தெரியுமா ? அவற்றைப்போக்க அரசு என்ன நடவடிக்கைகளை மேற்கொண்டுள்ளது என்பதை அறிவிக்க இயலுமா ?

மாண்புமிகு திரு. அ. பெ. தர்மலிங்கம் : தலைவரவர்களே, அந்த உரங்கள் பெரும்பாலும் கையிலே இல்லை. டை-அம்மோனியம் பாஸ்பேட் என்ற உரம் தேங்கியிருந்தது உண்மைதான். ஆனால் தமிழக அரசு அவைகளை எல்லாம் சரிக் கட்டி, எடைகளைச் சரி செய்து பார்த்து, அவைகளை புது சாக்குகளில் போட்டு விற்க நடவடிக்கைகளை மேற்கொண்டது. இன்றையதினம் அந்த டை-அம்மோனியம் பாஸ்பேட் உரம் கையிருப்பு இல்லை. தஞ்சை மாவட்டத்தில் மட்டும் கொஞ்சம் கையிருப்பு இருக்கிறது.

கொடைக்கானல்—சுற்றுலா இடம்

* 484 வினா—**திரு. கே. என். குமாரசாமி :** மாண்புமிகு பின்தங்கிய வகுப்பினர் நல அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) கொடைக்கானல் மலையை சுற்றுலா நகரம் ஆக்க அரசு திட்டமிட்டு உள்ளதா ?

(இ) ஆம் எனில், இது சம்பந்தமாக என்ன நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன?

மாண்புமிகு திரு. என். வி. நடராசன் : (அ) கொடைக்கானல் எற்கனவே சுற்றுலா இடமாக விளங்கிவருகிறது.

(இ) கொடைக்கானலை விரிவுபடுத்த ஓர் பெருந்திட்டம் அரசின் ஆய்வில் உள்ளது. கொடைக்கானல் நகரியத்தை விரிவு படுத்தவும், பெருந்திட்டத்தினை ஆராயவும், அக்டோபர் 4, 5 தேதிகளில் கல்வி அமைச்சர் அவர்களால் ஓர் மாநாடு கொடைக்கானலில் கூட்டப்பட்டது. அம் மாநாட்டின் முடிவுகளை அரசு ஆராய்ந்து வருகிறது.

வீடுகள் கட்ட மத்திய அரசிடமிருந்து நிதி உதவி

* 485 வினா—**திரு. என். கிட்டப்பா :** மாண்புமிகு பின்தங்கிய வகுப்பினர் நல அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

1969–70-ல் மத்திய அரசிடமிருந்து, நமது அரசுக்கு வீடுகள் கட்ட கூட்டுறவு இலாக்காவுக்கு தரப்பட்ட தொகை எவ்வளவு ?